# சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை

## மானியக் கோரிக்கை எண். 54

# வனம்

# 2011–2012

# அறிவிப்பு எண். 16

தமிழ்நாடு அரசு
2011



## சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை
## 2011–2012 ஆம் ஆண்டிற்கான அறிவிப்புகள்

## வனத்துறை

**தமிழ்நாட்டின்பசுமைப் போர்வையை அதிகரிக்க மாபெரும் மரம் நடும் திட்டம்**

தமிழ்நாட்டில் வனங்கள் மற்றும் மரங்கள் 28,306 சதுர கி.மீ. பரப்பளவில் அமைந்துள்ளன. இது மாநில நிலப்பரப்பில் 21.76 விழுக்காடாகும். 1988 ஆம் ஆண்டின் தேசிய வனக்கொள்கையின் முக்கிய குறிக்கோள் நாட்டின் மூன்றில் ஒரு பகுதி நிலப்பரப்பை வனம் மற்றும் மரப்போர்வையின் கீழ் கொண்டு வருவது ஆகும். தற்போது

இந்தியாவில் இந்தப் பரப்பு 23 விழுக்காடாக உள்ளது.

நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வாகன எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வரும் சூழ்நிலையில், காற்று மண்டலம் மாசு அடைந்து வருகிறது. உலக வெப்பமயமாதல் ஒரு பெரும் சவாலாக எதிர்கால தலைமுறைகளுக்கு இருக்கும் என்று வல்லுநர்கள் எச்சரித்து வருகிறார்கள். மரங்கள் காற்று மண்டலத்தில் இருக்கும் வாயு மாசு, கண்ணுக்கு புலப்படாத நுண்துகள்கள் ஆகியவற்றை தம்மிடத்தே ஈர்த்து நமது சுற்றுப்புறத் தூய்மையை பாதுகாக்கின்றன. எனவே, மாநிலத்தின் வனப்பகுதிகளை



பாதுகாப்பது மட்டுமின்றி, வெளியே இருக்கும் காலியிடங்களில் அதிகமாக மரம் நட்டு வளர்ப்பது இன்றைய சூழ்நிலையில் ஒரு இன்றியமையாத சமுதாய நலப்பணியாக உள்ளது.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழகத்தை தலைமைப் பொறுப்பேற்று ஆட்சி நடத்தும்போதெல்லாம், மாநிலத்தின் இயற்கை வளத்தை மிகுந்த சிரத்தையுடன் பாதுகாத்து, மேம்படுத்த பல்வேறு ஆக்கப்பூர்வ நடவடிக்கைகள் மேற்கொள்வார்கள்.

வனப்பாதுகாப்பிற்கு முன்னுரிமை தரும்வகையில் 2005ஆம் ஆண்டு சரக அலுவலர்களுக்கு ஒரே நேரத்தில் 225 ஈப்புகள்,

626 கைப்பேசிகள் ஆகியவை வழங்க ஆணையிட்டதுடன், புதிதாக 225 வனக்காப்பாளர் மற்றும் ஓட்டுநர் பணியிடங்களை உருவாக்கி ஆணையிட்டார்கள். அவ்வாறான சீர்மிகு நடவடிக்கைகள் காரணமாக, 2001 மற்றும் 2005க்கு இடைப்பட்ட காலத்தில் மாநிலத்தின் வனப்பரப்பு 2,322 சதுர கி.மீ அதிகரித்தது.

தேசிய வனக்கொள்கையான மூன்றில் ஒரு பகுதி நிலப்பரப்பை வனம் மற்றும் மரப்பரப்பாக உயர்த்துவதற்கு, காலியாக உள்ள இடங்களிலெல்லாம் மரம் நட்டு வளர்ப்பது அவசியமாகிறது. இதற்கென ஒரு மாபெரும் செயல்திட்டத்தினை உருவாக்க வேண்டும் என்று



மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அதற்கேற்ப, வனத்துறையின் சார்பில் மாவட்டத்திற்கு இரண்டு இலட்சம் மரக்கன்றுகள் வீதம் மாநிலத்தில் உள்ள 32 மாவட்டங்களிலும் மொத்தம் 64 இலட்சம் மரக்கன்றுகள் நட திட்டமிடப்பட்டுள்ளது. மரக்கன்றுகள் உற்பத்தி செய்து, நடுவதற்கு மரக்கன்று ஒன்றுக்கு ரூ. 46/– வீதம், ரூ. 30 கோடி மதிப்பீட்டில் மாநிலம் முழுவதும் 64 இலட்சம் மரக்கன்றுகள் மாவட்டங்களிலுள்ள பள்ளிகள், கல்லூரி வளாகங்கள், அரசுத் துறை மற்றும் தனியார் நிறுவன அலுவலக வளாகங்கள், தொழிற்சாலை வளாகங்கள், சாலைகள்

ஆகியவற்றில் காலியாக உள்ள இடங்களில் தொகுப்புத் தோட்டங்களாகவும், வரிசைகளிலும் மரக்கன்றுகள் நட்டு வளர்க்கப்படும். பரந்து விரிந்து, நிழல் பரப்பும் மரங்களும், கண்ணுக்கு குளிர்ச்சியான பல வண்ண மலர்ச் சொறியும் மரவகைகளும் தேர்வு செய்யப்படும். இதற்கென, ஒவ்வொரு இடத்தின் தன்மை, மண் வளம் போன்ற அமைப்புகளின் அடிப்படையில் மரக்கன்றுகளின் இனம் தேர்வு செய்யப்பட்டு நடப்படும். இத்திட்டத்தின் கீழ் வேம்பு, புங்கம், இலுப்பை, புன்னை, வாகை, நாட்டு ருத்திராட்சம், செண்பகம், மகிழம், மரமல்லி, தங்க அரளி, நாகலிங்கம், கடம்பம், குமிழ், கடுக்காய் போன்ற



நமது மாநில வனப்பகுதிகளுக்கே உரித்தான மரக்கன்றுகள் நட்டு வளர்க்கப்படும். அவையன்றி, இயல்வாகை, தூங்குமூஞ்சி வாகை, தபிபியா, மந்தாரை, வாதுமை, மலைப்பூவரசு போன்ற நகர்ப்புற வனவியலுக்கு உகந்த மரக்கன்றுகளும் நடப்படும்.

இத்திட்டத்திற்கான நிதி தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய நிதியிலிருந்தும் ஏனைய திட்டங்களிலிருந்தும் வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஒப்புதல் பெற நடவடிக்கை எடுக்கப்படும். நடப்படும் மரக்கன்றுகளை பாதுகாக்க தேவைப்படும் மர மற்றும் இரும்பு கூண்டுகள் தொழில்

நிறுவனங்களிடமிருந்து பெற நடவடிக்கை எடுக்கப்படும். இத்திட்டத்திற்கு தேவைப்படும் மரக்கன்றுகள் வனத்துறை நாற்றங்கால்களில் உற்பத்தி செய்யப்பட்டு 2012, ஜனவரிக்குள் தயார்நிலையில் வைக்கப்படும்.

தமிழகத்தை பசுமை மாநிலமாக மாற்றிட அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இத்திட்டத்தினை காணிக்கையாக்கிட, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் ஒப்புதலை எதிர்நோக்கி, உலக சாதனைகளை மிஞ்சும் வண்ணம் உள்ள இத்திட்டத்தினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 64வது பிறந்த நாளான



24.2.2012 அன்று தொடங்கி ஒரு வார காலத்துக்குள் முடிக்க வேண்டும் என்ற ஆர்வத்துடன் உள்ளோம். இத்திட்டத்தினை நிறைவேற்றி உலக வரைபடத்தில் தமிழ்நாடு ஒரு உயரிய நிலையை அடைவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒப்புதல் அளிக்கக் கோருகிறேன்.